விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 02 வியாழக்கிழமை (16.05.2002) தொலைபேசி 3378 ஒலி 148

நங்கையர் விரும்பும் நவீன
டிசைன் தங்க
நகைகளுக்கு
நியூ
நகுலா
ஜு வல்லறி
74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கொழும்பில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பிரதமர் ரணில் படை அதிகாரிகளுக்கு உத்தரவு!

### செய்தி ஏஜென்சி அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்குமாறு படை அதிகாரிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உத்தரவிட்டுள்ளதாக சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை இணைத்து விசேட பாதுகாப்பு ஒழுங்குச் செயலணி ஒன்றை அமைக்குமாறு படைத் தளபதி றொகான்தலுவத்த மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே ஆகியோருக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய விசேட பாதுகாப்புச் செயலணியை அமைப்பதற்கு படைத்தளபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் படைத்தரப்பு உயரதிகாரிகள் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதை அடுத்து விசேட பாதுகாப்பு அவசியம் இல்லை என்ற அடிப்படையில் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டன. இதனடிப்படையி

(10ம் பக்கம் பார்க்க)

## சிற்றி ஒவ் றிங்கோ இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டுவரும் "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பல இன்று காங்கேசன்துறையிலிருந்து புறப்படவுள்ளது.

இக் கப்பலில் பயணத்தை மேற்கொள்ள விரும்புவோர் பயண ஏற்பாடுகளுடன் காலை தெல்லிப்பழைக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை காலநிலை சீரின்மையால் இக் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

(த-8-

### சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு திரட்ட

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா

# வெளிநாடுகளுக்கு சூறாவளிப்பயணம்

## சகல கட்சி எம்.பீகளுடனும் பேசுவார்

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே யூன் மாத நடுப்பகுதியில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்பதாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல் அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்தித்து விளக்கமளிப்பதுடன் ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களையும் இந்தியத் தலைவர்களையும் சந்தித்து விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளிப்பதற்கு சூறாவளி சுற்றுப்பயணம் ஒன்றை இம்மாத இறுதியில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா மேற்கொள்ளவுள்ளார்.**

யூன் மாதம்15ம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்

தாய்லாந்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு

றக் கட்டிடத்தில் அழைத்து பேசவுள்ளார். இப்பேச்சுவார்த்தையின்

## இரகசிய புலனாய்வுப் பிரிவுகளை கலைப்பதற்கு அரசு முடிவு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திலும், பொலிஸ் திணைக்களத்திலும் மேலதிகமாக இயங்கிவரும் இரகசிய புலனாய்வுப் பிரிவுகளைகலைப்பதற்கு அரசு முடிவுசெய்திருப்பதாக அறிய வந்துள்ளது.

கலைக்கப்படவுள்ள இவ்விரு பிரிவுகளுக்கும் பதிலாக மத்திய உளவுப்பிரிவு ஒன்றை அமைக்கவும். அரசு தீர்மானித்துள்ளது.

இராணுவத்தினதும், பொலிஸ் திணைக்களத்தினதும் உளவுப்பிரிவுகள் பல பொய்யான தகவல்களை வழங்கியிருந்தமையை அரசு கண்டறிந்துள்ளமையாலேயே இவை கலைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## மீளக் குடியமர்த்தக்கோரி

## பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா மேற்கொள்ளவுள்ளார்.

யூன் மாதம்15ம் திகதி தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்னர் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத்தயாரிப்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

தாய்லாந்தில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சித் தலைவர்களையும் இம் மாதம் 20ம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றக் கட்டிடத்தில் அழைத்து பேசவுள்ளார். இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சிகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் பேச்சுவார்த்தையின் (10ம் பக்கம் பார்க்க)

## மீளக் குடியமர்த்தக்கோரி வலி வடக்கு மக்கள் நேற்று உண்ணாவிரதப்போராட்டம்

(அலுவலக நிருபர்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து 1987ம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்து யாழ் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மக்கள் ஒன்று திரண்டு நேற்று வலி வடக்கு செயலகத்தின் முன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக்காலை 8.30மணிக்கு தெல்லிப்பழையில் உள்ள வலி வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக பல நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தமையினால பிரதேச செயலகம் முற்றாக செயலிழந்து காணப்பட்டது.

12அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நடத்தப்பட்ட இவ் உண்ணாவிரதப்போராட்டத்தையடுத்து (10ம் பக்கம் பார்க்க)

## யாழ் – கண்டி வீதியை 24மணி நேரம் திறப்பது குறித்து புலிகள்-இராணுவம் சந்தித்துப் பேச்சு

(வவுனியா)

ஏ9 கண்டி-யாழ் வீதியை 24மணி நேரமும் திறந்து வைத்திருப்பது தொடர்பாக தமிழீழ விடுதலைப புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இராணுவ உயரதிகாரிகளுக்கும் இடையில் நேற்று ஓமந்தை சோதனைச் சாவடியில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் பிரமுகர்களான சோ.தங்கன், புலித்தேவன், தயாமாஸ்ரர் ஆகியோரும் இராணுவத்தரப்பில் வவுனியா இராணுவ அதிகாரி அல்விஸ் ஓமந்தை சோதனைச்சாவடிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி கப்டன் (10ம் பக்கம் பார்க்க)

## யாழ் கண்டிவீதி ஊடாக காலைமுதல் மாலை 5வரை பயணம் செய்ய முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கண்டி வீதி சோதனைச் சாவடிகள் பொதுமக்களின் போக்குவரத்துக்காக இன்றுமுதல் காலை 6 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டிருக்குமென யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைபகம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பின்பற்றப் படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முகமாலை ஊடாக ஓமந்தையை கடக்கவேண்டியவர்களும் ஓமந்தை முகமாலையை கடக்க வேண்டியவர்களும் பிற்பகல் (10ம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தை அமுல்படுத்தாதவரை சமாதானப் பேச்சு தாமதமாகும்

### புலிகள் அறிவித்ததாக தழிழ் கார்டியன் தகவல்

அரசும்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முழுமையாக அமுல்படுத்தப்படாதவரை தாய்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை, மேலும் தாமதமாகுமென விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக தழிழ் கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்களில் படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் முழு அளவில் நடைமுறைக்குக கொண்டு வரப்பட வேண்டுமெனவும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை மேலும் காலதாமதமாகும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தாயலாந்து பேச்சுவார்த்தைக்கு முன்னதாக தடைநீதான தடை நீக்கப்பட வேண்டுமெனவும் ஆனால் இலங்கை அரசாங்கம் இதுவரை தடையை நீக்கவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அடுத்த மாதம் தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலை இரு தரப்பினரும் தயாரிக்கவுள்ள நிலையில் இவ் அறிவித்தல் வெளியாகியுள்ளதாக கார்டியன் மேலும் தெரிவித்துள்ளது.(க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விட்டுக்கொடுப்பின் மூலமே சமாதானத்தை எட்டலாம்

## ஐரோ.ஒன்றிய பா.உறுப்பினர்உரை

(கொழும்பு)

இலங்கைஅரசின் சமாதான முயற்சியானது மிகவும் கடினமான பாதையாகும் அரசும் விடுதலைப்புலிகளும் சமாதான முயற்சியில் விட்டுக்கொடுத்து நடந்நால்தான் நாட்டில்சமாதானத்தை ஏற்படுத்தலாம்,என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர் றொபேட் ஈவின்தெரிவித்துள்ளார்.

இலண்டனில் உள்ளதமிழ் முக்கியஸ்தர்கள் றொபேட்ஈவினைசந்தித்து உரையாடினர்

இச்சந்திப்பின் பாதுறொபேட்ஈவின் தமிழ்முக்கியஸ்தர்களிடம் தெரிவித்திருப்பதாவது.

விடுதலைப்புலிகளின் அமைப்பு லண்டனில் தடைசெய்யப்பட்டிருந்தாலும் அவர்களுடை செயற்பாடு லண்டனில் வழமைபோல் இருக்கிறது.லண்டனில்உள்ள இலங்கையரைத் திருப்பிஅனுப்பும் சூழ்நிலை தற்போது ஏற்படவில்லை என்றும் றொபேட்ஈவின்தெரிவித்தார். (வ)

### சகோதரத்துவத்தினூடாக சமாதானம்

# நல்லெண்ண ஒருங்கிணைப்பு குழு இம்மாத இறுதியில் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

'சகோதரத்துவத்தினூடாக சமாதானத்தைஎட்டல்' என்ற தொனிப் பொருளில் சமாதான நல்லெண்ண ஒருங்கிணைப்புக்குழு இம்மாத இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

70 பேர் கொண்ட இக்குழுவினர் 3தினங்கள் இங்கு தங்கியிருந்து சமாதானம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தல், மற்றும் மக்களின் வாழ்வியல முறைமை,எதிர்காலப் பிரச்சினைகள்,சமாதான முன்னெடுப்புக்களில் மக்களின் பங்கு என்பன தொடர்பாக ஆராயவுள்ளனர்.

வடக்குத் தெற்கு மக்களிடையேசகோதர சிநேகபூர்வ தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களிடையே வலுவான பிணைப்பொன்றின் மூலம் சமாதானத்தைகட்டியெழுப்புவதே தமது யாழ்ப்பாண பயணத்தின் நோக்கமென,இங்கு வரவுள்ளகுழுவுக்குத்தலைமை தாங்கி வரும் சமாதான நல்லெண்ண ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார். (உ-6)

# பொ.ஐ.முன்னணிஎம்.பிகள் யாழ்-மட்டுசெல்லவுள்ளனர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர்விரைவில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகியபகுதிகளுக்கு விஜயம் செய்ய விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் யாழ்ப்பாணத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் யுத்தநிறுத்த மீறல்கள் இடம் பெற்றுள்ளனவா என்று ஆராயவும் இவர்கள் விருப்பம் கொண்டுள்ளதாக முன்னாள் அமைச்சரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமானடி.எம். ஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் இக் குழுவில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ் பி இரத்தினாயக்கா, கொழும்பு மாவட்ட எம்.பி டிலான் பெரேரா உட்பட மற்றும்பல முக்கியஸ்தர்கள் இடம் பெறவுள்ளனர். (ம)

# கொழும்பு மாநகர பாதுகாப்பு மீண்டும் பலப்படுத்தப்படுகிறது

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தின் பாதுகாப்பு மீண்டும் தற்போது பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின் நாட்டின் பல பாகங்களிலும் பாதுகாப்பு தளர்த்தப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அங்கு, ஆட்கடத்தல், கொள்ளை, வன்செயல்கள் அதிகரிதிருந்தமையால் மீண்டும் இராணுவம், பொலிஸ் இணைந்த கூட்டணி ஒன்று பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

இராணுவம் பொலிஸ் கூட்டணிகள் தமது பாதுகாப்புக் கடமைகளை இன்னும் ஒரு சில தினங்களில் பொறுப்பேற்கவுள்ளதாக கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார். (வ)

### கிழக்குதிமோர் சுதந்திரநிகழ்வில்

# அமெரிக்கா சார்பில் பில்கிளின்டன்

(வாஷிங்டன்)

கிழக்கு திமோரின் சுதந்திர தினவைபவத்தில் அமெரிக்க ஜனாதிபதி யோர்ஜ்டபிள்யூ புஷ்ஷின் விசேடபிரதிநிதியாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் கலந்து கொள்ளவுள்ளார்.

உலகின்புதிய நாடான கிழக்கு திமோரின் சுதந்திர தினவிழா எதிர்வரும்19ம் திகதி இடம்பெறவுள்ளது.

இவ்வைபவத்தில் முதலாவது ஜனாதிபதியாக பனானா கஸ்மாவோ ஆட்சிப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

மேற்படிநிகழ்வில் அமெரிக்காவில் இருந்து 6பிரதிநிதிகள் விசேடமாக கலந்து கொள்ளவுள்ளனர். (உ-7)


### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

பழைய வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய் எனும் முகவரியைச்சேர்ந்தநடராஜா சுதன் என்பவருடைய தே.அ அட்டை(இல 733613645 V) விசேட அ. அட்டை என்பன சுன்னாகத்திற்கும் யாழ் போதனா வைத்திய சாலைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்பஸ் நிலையத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (5308)

**தவறிவிட்டது**

16-04-2002 அன்று முக மாலையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் சிவதாஸ் வசந்தாதேவி என்பவருடைய திருமண ஒளிப்பதிவு நாடா (வீடியோ கசற்)தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் இல-03, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம்வழங்கப்படும். (சி 4266)


# வியாங்கொட விகாரையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

வியாங்கொடப் பகுதியில் உள்ள பௌத்த விகாரையொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகுதி ஆயுதங்களை வியாங்கொட பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஆயுதங்களில் 11கைக் குண்டுகள், துப்பாக்கிகள் துப்பாக்கி ரவைகள் ஆகியவை அடங்கும்.

விகாரைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக பிக்கு ஒருவரும் பொதுஜன ஐக்கியமுன்னணியின் முக்கிய உறுப்பினர் ஒருவரும், இராணுவத்தில் இருந்து தப்பியோடிய ஒருவர் உட்பட மூவர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம)

### நாவாந்துறையில் கோஷ்டி மோதல்

# வாள் வெட்டுக்கு இலக்காகி ஆறு இளைஞர்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் நேற்றுக் காலை இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஆறு இளைஞர்கள் காயமடைந்து யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த சி.மகேஸ்வரன் (வயது- 23) ஜோ.விஜிதரன் (வயது-15), எஸ் சந்திரகுமார் (வயது23) சி. றொக்சன் (வயது-21), அ.அயல் (வயது-19), எஸ். கண்ணன் (வயது-20) ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர்களாவர்.

பழைய பகை காரணமாக மேற்படிநாவாந்துறைப் பகுதி இளைஞர்களுக்கும் சாவகச்சேரியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து நாவாந்துறையில் வசிக்கும் இளைஞர்களுக்குமிடையில்ஏற்பட்டவாய்த் தர்க்கமே பின்னர் கோஷ்டி மோதலாகமாறி கத்திக்குத்து வாள் வெட்டில் முடிவடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (இ.6)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### யாழ்ப்பாண நிறுவனமொன்றிற்காக வேலைவாய்ப்புக்கான நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணத்தில் உள்ள நிறுவனமொன்றில் சேவை ஆற்றுவதற்காக விருப்பம் உள்ள, தொழில் வழிகாட்டுனர் அலுவலகத்தில் பதிவு செய்து உள்ள சமூகவியல், பொருளியல் விசேட பாடமாகக்கொண்ட கலைப் பட்டதாரிகளும், விவசாயப் பட்டதாரிகளும் சேவை வழங்குவது சம்பந்தமாக நேர்முகத்தேர்வு நடைபெற உள்ளதனால் தொழில் வழிகாட்டுனர் அலுவலகத்தில் பதிவு செய்து உள்ள மேற்குறிப்பிட்ட பட்டதாரிகளை எதிர்வரும் 18.05.2002 (சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் தமது சுயவிபரக் கோவையுடன் தொழில் வழிகாட்டுனர் அலுவலகத்திற்கு தவறாது சமூகமளிக்கும்படி தொழில் வழிகாட்டுனர் அலுவலகப் பணிப்பாளரினால் வேண்டப்படுகின்றீர்கள்.

**பதிவாளர்**
யாழ் பல்கலைக்கழகம்

(கி-4267)


### சங்கானையில் அரசியல் விழிப்புணர்வு

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினமிரவு 8.00 மணியளவில் நிகழ்கால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

சங்கானை வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பிரமுகர்களான பாப்பா, ஐயா அண்ணா, குயிலன், மற்றும் மதுலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆனையிறவுச் சமர் தொடர்பான ஒலிஒளி நாடாவும் காண்பிக்கப்பட்டது. (த-225-123)

### பளையில்

## உதவி அரச அதிபர் பணிமனைதிறப்பு

(திருநெல்வேலி)

இரண்டுவருடங்களின் பின்னர் பளைப்பகுதியில் பளை உதவிஅரசாங்க அதிபர்பணிமனை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

பளை உதவிஅரசாங்கஅதிபர் க.புத்திசிகாமணி தலைமையில் இடம்பெற்றநிகழ்வில் கிளிநொச்சிமாவட்ட அரசாங்கஅதிபர் எஸ் ஐயாத்துரை அலுவலகத்தை திறந்து வைத்தார். (ச-43)

# இராசி பலன்

(வைகாசி2வியாழன்)
சதுர்த்தி பி.ப4.36வரை
திருவாதிரை பி.ப5.22வரை
இராகுகாலம் 1,23-12.53
சுபநேரம்7.23-8.53
சதுர்த்திவிரதம்

**மேடம்**
வாக்குமேன்மை, செய்தொழில்சிறப்பு, எடுத்தகாரியம்நிறைவேறும், சகோதரர் உதவி,

**இடபம்**
வீண்விவாதம், போசனசுகம், திடீர் நன்மை முயற்சிமந்தம்

**மிதுனம்**
விருந்துபசாரம்,நண்பர்கள் உதவி,சயனசுகம், காரியஅனுகூலம்

**கடகம்**
பெரியோர்நன்மை, முயற்சி தாமதம், சயனசுகக்குறைவு, அதிகாரம்

**சிங்கம்**
நண்பர்கள்சந்திப்பு, கீர்த்தி காரியசித்தி, தனலாபம்

**கன்னி**
பிறர்உதவி, அதிகபிரயாசை,உற்சாகம்,முயற்சிபலிதம்

**துலாம்**
கட்டுப்பாடு,தொழில்நிலை மாற்றம், வயிற்றுக்கோளாறு காரியதாமதம்

**விருச்சிகம்**
பிரயாணபயம், உடல் நலக்குறைவு, காரியதடங்கல், வீண் தொல்லை.

**தனுசு**
காரிய அனுகூலம், வாகன வசதி, நண்பர்கள் சந்திப்பு, தனலாபம்.

**மகரம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி,முயற்சி கைகூடும் உன்னதநிலை செய்தொழில் நன்மை.

**கும்பம்**
வியாபார நன்மை, பிரயாணஇடஞ்சல், உடல்நலக் குறைவு, பொருள் சேர்க்கை.

**மீனம்**
தன்நம்பிக்கைகுறைவு,எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம்,தாய்வழிஉறவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## பொறுப்பற்ற இளைஞர்களால் தொல்லை

(சுண்டுக்குளி)

பஸ்ரியான்சந்தியில் கூடும் இளைஞர்கள் சிலர் அவ்விடமூடாகப் போவோர் வருவோர்க்குப் பெருந்தொல்லையாக இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மாலை 6 மணிக்குப் பின்னர் இவ்விடத்தில் கூடும் இளவட்டங்கள், முதியவர்களின் மனங்களைப் புண்படுத்தும்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், யுவதிகளின் சுதந்திரமான நடமாட்டத்திற்கும் இடையூறு புரிந்துவருகின்றனர்.

சிலவேளைகள், தமக்குள் முரண்படும் இவர்கள் வாய்த்தர்க்கம் மற்றும் கைகலப்பில் கூட ஈடுபட்டு வருவதாக பாதிக்கப்படும் பலரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர். (உ-110)

# எமது முயற்சிகளில் சுபீட்சமும் பொருளாதார எழுச்சியும் நிலைபெறுமென நம்புகிறோம்

### யாழ். செலான் வங்கிக் கிளை திறப்பு விழாவில் லலித் கொத்தலாவல

(யாழ்ப்பாணம்)

எமது முயற்சிகளால் சுபீட்சமும், தொழில் வாய்ப்புகளும் பொருளாதார எழுச்சியும் வட-கிழக்கில் நிலைபெறும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

சிநேகம், சமாதானம் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம் வாழ் மக்களுடன் கரம் கோர்த்து எமது பொதுப்படையான சமாதானக் கனவுகளும், இலட்சியங்களும் நிறைவேற வேண்டுமெனவே நாம் இங்கே வந்துள்ளோம்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள செலான் வங்கித் திறப்பு விழாவில், அதனைத் திறந்து வைத்துப் பேசிய தலைவர் தேசமான்ய லலித் கொத்தலாவல இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

இன்று நாம் ஏற்றி வைக்கும் இந்த மங்களவிளக்கானது சமாதானத்திற்காக எமது நம்பிக்கையையும் பிரார்த்தனையையும் பிரதிபலிப்பது மட்டுமன்றி வடக்கு-கிழக்கு மற்றும் முழு நாட்டிலும் அமைதியையும், அன்பையும், புரிந்துணர்வையும் நிலைநாட்டும் என எதிர்பார்க்கிறோம்.

எல்லோரும் இவ் உலகின் குழந்தைகள் என்னும் புனிதக் கொள்கையை நாம் கொண்டிருக்கிறோம்.

இப் பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் சாதி பேதமின்றி, சம உரிமையுடன் எவ்வித வேறுபாடுமின்றி, வறுமையின்றி, அமைதியுடன் தமது கனவுகளை நனவாக்கி வாழும் உரிமையுடையவர்கள்.

நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் அன்புடனும், புரிந்துணர்வுடனும், சகிப்புத்தன்மையுடனும், மன்னித்துக் கொள்ளும் மனப்பான்மையுடனும் இருப்போமேயானால் இந்த நோக்கை அடையமுடியும்.

கிராமின் கிரட்டிற் நிறுவனம் மூலம் வறுமையை அகற்றி சேதமடைந்த கட்டடங்களையும், வீடுகளையும் திருத்தியமைக்கவும், புதிய வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும் நிறுவவும், அனைவருக்கும் கடன் வசதிகளை செய்து தரவும் நாங்கள் யாழ்ப்பாண மக்களுடன் கைகோர்த்து ஆவன செய்ய முழு முயற்சி எடுப்போம் என்று குறிப்பிட்டார்.

இந் நிகழ்வுகளில் செலான் வங்கி உப தலைவர் ராஜ்குமார் ரெங்கநாதன், பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளரும் பொது முகாமையாளருமான திருமதி ரோஹினி நாணயக்கார ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

மற்றும், அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ், யாழ். நகர முதல்வர் எஸ். கந்தையன், நல்லை ஆதீன முதல்வர், உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-10,2)

## சைவ சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் விநாயகர் தேவஸ்தான இந்து இளைஞர் மன்றத்தால் மாவட்ட ரீதியில் சைவசமய அறிவுப்போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00மணிக்கு கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இடம்பெறவுள்ள இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்களை மேற்படி அமைச்சே வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-225

# போர் நிறுத்த உடன்பாட்டை எந்தத் தரப்பும் மீறவில்லை

### வாகரைச் சம்பவம் குறித்து கண்காணிப்பு குழு அறிக்கை

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தம் எவ்வகையிலும் எத்தரப்பினாலும் மீறப்பட்டிருக்கவில்லை என்று வாகரைச்சம்பவம் பற்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நடைபெற்ற சம்பவம்மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கக் கூடியதுதான். ஆனால் எந்தத் தரப்பாவது அதற்கு முற்று முழுதான பொறுப்பு என்று கூற முடியாது.

எந்தத்தரப்பாவது போர் நிறுத்த உடன்பாட்டை மீறியிருக்கவில்லை. இவ்வாறுகண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஹக்ரப ஹக்லாண்ட் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் உறுப்புரை 1 (3) இன் பிரகாரம், இலங்கையின் கடற்படை சந்தேகத்திற்கிடமான இழுவைப்படகொன்றை இடைமறித்தமை சட்ட பூர்வமான அதன் பணியாகும். அப்படகில் சட்ட விரோதமாக மோட்டார் ஷெல்களும்ஆர்.பீ.ஜீ.க்களும் கடத்தப்பட்டமை நிரூபிக்கப்பட்டது.

ஆனால் அந்த இழுவைப் படகை எந்த வொரு தரப்புடனும் சம்பந்தப்படுத்த ஆதாரங்கள் இல்லை.

இதனால் இதற்காக எந்தவொரு தரப்பையும் போர் நிறுத்தத்தை மீறியதாக குற்றஞ் சாட்ட முடியாது. இவ்வாறு ஹக்லாண்ட் தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை, வாகரை படகு வெடிப்புச் சம்பவத்துடன் புலிகள் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று தமிழர் கூட்டணி எம்.பி. ஆர். சம்பந்தன் தெரிவித்திருப்பதுடன்,

வன்னிப் பிராந்தியத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் குடியிருப்புப் பகுதிகளுக்கு மேலாக விமானியால் இயக்கப்படாத வேவுவிமானங்கள் பலதடவைகள் பறந்ததாக விடுதலைப் புலிகள் கண்காணிப்பு குழுவிடம் புகார் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# போரை முடிவுக்கு கொண்டுவரும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது

### இலங்கைநிலைகுறித்துஅஸ்லிவில்ஸ்கருத்து

(கொழும்பு)

கடந்த இருதசாப்தங்களாக இலங்கையில் இடம்பெற்று வந்த போரை முடிவுக்கு கொண்டுவரும் சூழ்நிலையொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று புனர்வாழ்வு மீள்குடியமர்வு அமைச்சின் ஆதரவுடன், உலக உணவு நிறுவனம் மீண்டும், உணவுஉதவித் திட்டத்தினை இலங்கையில் ஆரம்பிப்பது தொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையைஉருவாக்கியுள்ளது எனவும்,

இலங்கையில் தற்போது மேற் கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் அடிப்படையில் சமாதானம் மலரும் எனவும் அவர் நம்பிக்கைதெரிவித்துள்ளார். (உ-8)

# பாஷையூர் மீனவர்கள் படையினரால் துன்புறுத்தல்

### கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் மீனவர்கள், கடற்படையினர் தம் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள அடாவடித் தனங்கள் குறித்து கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடித மூலமான அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சமாதானத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் மீனவர்களாகிய நாம் தொடர்ந்தும் கடற்படையினரால் துன்புறுத்தப்படுகின்றோம்.

பாஷையூர் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை காட்ட வேண்டியுள்ளதுடன், உடற் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

பின்னர், தொழிலை முடித்து கரை திரும்பும் போதும் இவ்வளவு பரிசோதனைகளும் இடம் பெறுவதுடன், மீன்களும் கொட்டிச் சோதனையிடப்படுகின்றன.

இப் பரிசோதனைகள் தேவையற்றதும் நேரத்தை வீணடிப்பதும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## இலவசபாடப் புத்தகங்களை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கான 2002 ஆம் ஆண்டிற்கான மீதி இலவச பாடப் புத்தகங்கள் இன்று கோட்டக்கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ-19)

# இஸ்ரேலின் செயலுக்கு மன்னிப்புச் சபைகண்டனம்

(ஜெருசலேம்)

மேற்குகரையில் இஸ்ரேலியர் நடத்திய தாக்குதல்களிற்கு சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியர்கள், பலஸ்தீனர்களுக்கு எதிராக அண்மையில் நடத்திய தாக்குதல்களின் போது, பலஸ்தீனர்கள் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டது தொடர்பாகவே மன்னிப்புச்சபை கண்டனம்வெளியிட்டுள்ளது.

சர்வாதிகாரம், ஊழல் மிக்க பலஸ்தீன அதிகாரசபை சீர்திருத்தங்களை மேற்கொள்ளாவிட்டால், பலஸ்தீனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தான் தயார் இல்லை என இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனர்கள் நடத்தி வரும் பயங்கரவாத தாக்குதல்கள், வன் செயல்கள் போன்றவற்றை முற்றாக நிறுத்தும் வரை பேச்சில் ஈடுபடப்போவதில்லையென அமெரிக்க நிர்வாகத்திடம் ஏற்கனவே தெரிவித்து விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# வடக்கு- கிழக்கை ஐந்து பொருளாதார வலயங்களாகப் பிரித்து பொருளாதார வளர்ச்சிக்கு புத்துயிரூட்ட திட்டம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குமாகாணங்களை ஐந்து பொருளாதார வலயங்களாகப் பிரித்துபொருளாதார வளர்ச்சிக்குபுத்துயிர் ஊட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் ஆகிய 5வலயங்களாகவே பிரிக்கப்படவுள்ளன.

இந்த வகையில் திருகோணமலை உல்லாசத்துறை, மீன்பிடி, தொழிற்றுறை, சர்வதேச வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம், துறைமுகம், விமான நிலையம்போன்றவற்றின் அபிவிருத்திக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்க முடியும்.

இதுதவிர, காங்கேசன் சீமெந்துதொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழிற் பேட்டை, ஆனையிறவு உப்பளம், காரைநகர் படகுகட்டும் தொழிற்சாலை போன்றவை வடக்கிலும், கடதாசி, சீனி, கனியமணல், கஜூ ஆகிய தொழிற்சாலைகள் கிழக்கிலும்மீண்டும்உயிர் பெறவுள்ளன.

இவற்றை தெரிவித்த தொழில், தொழில் வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க சீர்குலைந்து போன அபிவிருத்திக்கான உட்கட்டுமானங்களை திருத்தியமைக்கும் போது பெருமளவு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

வீதிகள், கட்டிடங்கள், நீர்ப்பாசன நிர்மாணிப்புகள், வீடமைப்புத் திட்டங்கள் என்பனவற்றுடன் இலங்கைக்கும்இந்தியாவுக்கு மிடையிலானவீதியமைத்தல் என்பன பொருளாதாரத்திற்கு புத்துயிர் ஊட்டுவதாக அமையும் எனவும் தெரிவித்தார். (உ)

## கொள்கை விளக்கம் கூட்டம்

(மந்திகை)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்எதிர் காலதொழில் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைவிளக்கம் கடந்த திங்கட்கிழமைபருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை சுகாதார வைத்திய அதிகாரி ஜே.ஏ. ஞானசுதன் தலைமையில் நடைபெற்றது. (உ-23)

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் இரதோற்சவ சிறப்பு மலர் 16.05.2002


## பிரதம குருவின் ஆசியுரை

சரித்திரப் பிரசித்தி பெற்ற புராதன ஆலயமான ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலின் சித்திரபானு வருட மகோற்சவத்தின் பத்தாம் நாளான இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. பஞ்ச கிருத்தியங்களைக் குறிக்கும் மகோற்சவத்தின் தேர்த் திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும் வண்ணம் அமைகிறது. மகோற்சவத்தில் சிறந்த விழாவாக இந்தத் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. யாழ்ப்பாண அரசர் பரம்பரையிலே வந்தவன் என கருதப்படும் பரராஜசேகரன் எனும் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு செய்த தலம் இத்தலம். இத்தலத்திலே வைகாசி மாத திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய சதுர்த்தி விரத நன்னாளன இன்று லோக ஷேமத்திற்காக பிரணவ பொருளாம் ஐங்கரன் பஞ்சமுக விநாயகராக வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணிய பெருமானோடும் சண்டேஸ்வரரும் கூட தேரிலே எழுந்தருளல் செய்கின்றான். இந்த சுபதினத்திலே நாட்டிலே சமாதானமும் சுபீட்சமும் மக்கள் எல்லா நலமும் பெற்று வாழ ஆசி கூறி அமைகிறேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

*சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்த குருக்கள்.*

தேர்த்திருவிழா நேர்முக வருனணை காலை 8-11 மணி வரை இலங்கை தேசியசேவை, யாழ்சேவை இரண்டிலும் இடம்பெறவுள்ளது.



ஈழத்திலே சரித்திரப் பிரசித்தி பெற்ற பழமை வாய்ந்த இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று இடம்பெறுகின்றது.

ஈழத்திலே உடுவில் கோவில்பற்றை முற்றுகை இட்ட போர்த்துக்கேயர் இணுவிற் கிராமத்துப் பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலைச் சீர்குலையச் செய்தனர். அரச பரம்பரையினால் பராமரிக்கப்பட்ட இக் கோவிலைப் பாதுகாக்க எண்ணி இதனை மடம் என்று வாதாடி ஓரளவிற்குப் பாதுகாத்தனர் என்று கர்ணபரம்பரை கூறுகின்றது. வாயிலில் மடம் இருந்தமையால் "மடத்துவாசற் பிள்ளையார்" என வழங்கலாயிற்று.

இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் மரபின் பதினோராவது தலைமுறையைச் சேர்ந்த, நல்லூரில் அரசாண்டு இணுவிலில் வாழ்ந்து வந்த பரராஜசேகர மன்னனால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் இன்றும் பரராஜசேகரப் பிள்ளையார் என்றே அழைக்கப்படுகின்றது.

விடியற் காலை எழுந்து விநாயகப் பெருமானைத் தொழுது சென்ற அடியார்கள் அனைவருக்கும் நினைத்தவற்றை விநாயகப் பெருமான் அள்ளி வழங்கிக் கொண்டே இருக்கிறார். இதனால் அவர்கள் நாம் பெற்ற பெரும் பேற்றுக்கு நன்றிக்கடன் செலுத்து கின்றமையால் இன்று இவ்வாலயம் வான் உயர்ந்த கோபுரத்துடன் காட்சி அளித்துக்கொண்டு இருக்கிறது. வேண்டுவார்க்கு வேண்டுவதை அருளும்

''அத்தி முகவனை நித்தம் நினைப்பவர்
சித்த மகிழ்வொடு முத்தி பெறுவர்''

அந்த வகையில் இன்று பரராஜசேகரப் பஞ்சமுக விநாயகர் முருகன் வள்ளி தெய்வயானை சமேதராக சண்டேசுவரப்பெருமானும் சித்திரத் தேரிலே பவனி வருகின்றனர். அவர்கள் அருள்பெற நாமெல்லாம் ஒன்று திரண்டு வடம் பிடித்து இழுப்போம். இறை இன்பத்தில் இணைவோம். நாட்டிலே சாந்தி, சமாதானம், சபீட்சம் நிலவ இணுவைப் பரராஜசேகரன் பாதம் பணிந்து போற்றுவோம்.


*ஆசிரியர் தே. திருமுருகராஜன்.*

## 'சமாதானம் சுபீட்ஷமொடு இலங்கை வாழ இத்திருவூர் இணுவையிலே ஆசி தந்தான''

சித்திரத்தேர் மீதேறிப் ஒய்யா ரஞ்சேர்
சிற்பரனாம் பரராஜ சேக ரனாம்
அத்திமுகப் பிள்ளையாரும் பவனி வந்தார்
ஆறுமுகன் பள்ளிதேவ சேனா வோடு
சக்தி தரும் சண்டீசர் சூழ்ந்து வந்தார்
சமாதானம் சபீட்ஷமொடு இலங்கை வாழ
இத்திருவூர் இணுவையிலே ஆசி தந்தார்
இணுவைவிநா யகனடிகள் போற்றி செய்வாம்

அன்பினோடு அறிவு மிக்க அமைதி பேணி
அருந்தமிழை அரியாச னிக்க வைத்தார்
துன்பமெல்லாம் நீக்கி அருள் நிமலன் தந்தார்
துதிக்கையைத் தூக்கி எமைக் காக்க வந்தார்
அன்பரெல்லாம் ஆனைமுகன் தேர்வ டத்தை
அதிபக்தி யோடிழுத்துப் பொடி சிலிர்க்க
இன்பரஸத் தேனமுதாய்ச் சாந்தம் தந்தான்
இறைசித்திரத் தேர்ப்பவனி வருகின் றானே

*மஹா வித்துவான்.*
*பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர்* M.A
(அகில இலங்கை சமாதான நீதவான்)




**லிங்கம் தொலைத் தொடர்பு நிலையம்**
உள்நாடு - 70 - 212641
வெளிநாடு - 94-70 - 212641
இன்ரநெற் சர்வதேச அழைப்புக்கு
*லிங்கம் ஸ்ரோஸ்*
பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலடி
இணுவில்

**ஸ்ரீ ஐங்கரன் டொட் கொம்**
70-212636
94-70-212635 (இன்ரநெற் உட்பட)
பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலடி
இணுவில்.

**மின்மணி லைற் சேவிஸ்**
பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடி
இணுவில்.

**மகாநதி புடவை அகம்**
No-16 நவீன சந்தை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சாயி நகை மாடம்**
*சாயி பல்பொருள் வாணிபம்*
கே. கே. எஸ் வீதி,
இணுவில்

**நியூ வெஸ்கோ கிறீம் ஹவுஸ்**
பரராஜ சேகரப் பிள்ளையார்
கோவில் முன்
இணுவில்.

**விசேடம்**
சுத்தமான நல்லெண்ணெய்க்கு
தரமான எள்ளிலிருந்து தயாரிக்கப்பட்டது.
MULTI - OIL.INUVIL

**.S.P சிவகரன் ஆட்ஸ்**
குமரக்கோட்டம் . கோண்டாவில்

**நியூட்டன் உயர் கல்வி நிறுவனம்**
ஆரியகுளம் சந்தி அருகாமை,
யாழ்நகர்.

**விநாயகர் தேனீர்ச்சாலை**
ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலடி
இணுவில்.

**துளசி லைற் சேவிஸ்**
பரராஜ சேகரப் பிள்ளையார் கோவிலடி
இணுவில்.

**அண்ணா தொழிலகம்,**
இணுவில்
T.Phone No. 21 -3565

**ஸ்ரீ லட்சுமி தேனீர் அகம்**
கே.கே.எஸ் வீதி,
இணுவில் சந்தி.

**சிவம் ரெக்ஸ்ரைல்**
கே.கே. எஸ் வீதி (இணுவில்
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்)

**திகழ் பிறிண்ரேர்ஸ்**
கே.கே.எஸ் வீதி, இணுவில்

## இன்று ஒரு தகவல்

## நினைப்பு பெரிது அறிவு சிறிது

ஒரு ஊரில் ஒரு கிழவி இருந்தாள். அவள் தோசை, அப்பம் முதலியவை சுட்டு, அவற்றை விற்றுப் பிழைத்து வந்தாள். தினந்தோறும் சரியாகக் காலை நான்குமணிக்கு அவள் வியாபாரத்தை ஆரம்பித்து விடுவாள்.

அவளிடத்தில் ஒரு சேவல் இருந்தது. அது கூவிய மாத்திரத்தில் விடிந்து விட்டது என்று கிழவி அறிந்து கொள்ளுவாள். நாளாரம்பத்தில் தன் சேவல் கூவுவதால்தான் பொழுது விடிகிறது என்று அவள் நம்பிவிட்டாள்.

ஒரு சமயம், அந்த ஊர்ச் சிறுவர்கள் சிலர் கிழவியைத் துன்புறுத்திவிட்டார்கள். அவளுக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று தோன்றி விட்டது. அவள் தனக்குத்தான், 'இந்தச் சின்னப் பயல்களுக்கு நான் யாரென்று தெரியாது. என் சேவலைத் தூக்கிக்கொண்டு நான் அடுத்த ஊருக்குப் போய் விடுகிறேன். அதன்பிறகு இந்த ஊரில் எப்படி விடிகிறது என்று பார்ப்போம். பயல்கள் இருட்டிலேயே கிடந்து சாகட்டும்' என்று சொல்லிக் கொண்டு பக்கத்துக் கிராமம் ஒன்றுக்குப் போய்விட்டாள்.

மறுநாள் அவளது ஊரில் இருந்து புது ஊருக்குச் சிலர் வந்திருந்தார்கள். கிழவி அவர்களைப் பார்த்து, 'பார்த்தீர்களா? என்னைச் சமாதானப் படுத்தியிருந்தால் உங்களுக்கு இப்படியெல்லாம் நேராதல்லவா? பாவம் உங்களைப் பார்த்தால் எனக்கு வருத்தமாக இருக்கிறது. என்ன செய்வது? இருட்டிலேயே கிடந்து சாகுங்கள்' என்றாள். அவர்களோ விஷயம் புரியாமல், விபரம் என்ன என்று கேட்டார்கள். கிழவி சொன்னாள், 'நான் என் சேவலைக் கையோடுகொண்டு வந்து விட்டேன். அதனால் தான் உங்கள் ஊரில் பொழுது விடியவே இல்லை' இதுதான் விபரம் என்றாள் கிழவி.

புத்திகெட்ட கிழவி தன்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் பெரிய நினைப்பைப் பார்த்து, அந்த ஆசாமிகள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

யாழ். அற்புதா

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், கைதானவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் விரைவில் வாபஸ்

### சட்டமா அதிபர் கமலசபேசன்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் விரைவில் வாபஸ் பெறப்படலாம் என்று சட்டமா அதிபர் கே.சி. கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த சட்டமா அதிபர், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் சிலர், அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட முன்னரே விடுதலை செய்யப் பட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளார்கள்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் படுபவர்களுக்கெதிராக குற்ற ஒப்புதல் வாக்கு மூலம்ஒன்றே சான்றுப் பொருளாக இருப்பதால், அக் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் தன்னிச்சையாகப் பெறப்படவில்லை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் இவர்கள் மீது சுமத்தப்படும் குற்றங்களுக்கு ஆதாரம் இல்லை.

எனவே, இவர்களை தொடர்ந்தும் தடுத்து வைப்பது அநீதியானது என்பதால் இவர்கள் மீதானவழக்குகளை வாபஸ் பெறப்படலாமென்றார்.

இதே வேளை, குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி போலி ஆவணங்களை பயன் படுத்தியதாகச் சந்தேகிக்கப்பட்டு நீர்கொழும்புச் சிறையில்தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் இவ்விதம் விடுதலை செய்யப்பட மாட்டார்கள்.

அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என சட்டமா அதிபர் தெரிவித்தார். போலிக்கடவுச் சீட்டுக்களை பெற்றுத் தந்ததாக இவர்கள் தமது பிரயாண முகவர்கள் மீது குற்றம் சுமத்தும் பட்சத்தில் இவர்களுக்கு பதில் முகவர்கள் கைது செய்யப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார். (உ)

## சந்தேகநபர் சிறையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸில் அண்மையில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞர் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (த-19-06)

## மட்டு. மாவட்டத்தில் உயிராபத்தை ஏற்படுத்தும் மலேரியா பரவுகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியமலேரியாக்காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக மலேரியா தடுப்பு இயக்க அதிகாரி டாக்டர் எம் ஜ. வரீன் தெரிவித்துள்ளார்.

முன்னைய வருடங்களோடு ஒப்பிடுமிடத்து இவ்வருடம் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய மலேரியாக் காய்ச்சல் வேகமாக பரவி வருவதால் அனைவரையும் விழிப்புடன் இருக்குமாறும் அவர்கேட்டுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டு இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 6 ஆயிரத்து 632 பேரில் 201 பேர் உயிரிழந்துள்ளனர்,

2001 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 7 பேரில் 207 பேர் இறந்துள்ளனர்.

இதேவேளை, இவ்வருடம் கடந்த 4 மாதங்களில் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 857பேரில் 329 பேர் மரணமடைந்துள்ளனர். (உ-9)

## அமெரிக்கப் போர்க்கப்பல்கள் இன்னும் சில இலங்கை வரவுள்ளன

### நாசகாரிக் கப்பலின் கட்டளை அதிகாரி

(கொழும்பு)

அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் எதிர்காலத்தில் மேலும் மேலும் இலங்கைக்கு வரவிருக்கின்றன என்று கொழும்பு வந்து நான்கு நாட்கள் தங்கியபின் கடந்ததிங்கள் என்று திரும்பிச்சென்ற அமெரிக்காவின் யூ எஸ். எஸ். சைட்ஸ் என்னும் ஏவுகணை நாசகாரிக்கப்பலின் கட்டளை அதிகாரி ஒக்டாவியோ மண்டியுலே தெரிவித்தார்.

உலகரீதியாக பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் பணியில் சப்பல் இலங்கைக்கும் வந்து செல்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் முன்னேற்றமடைவது பற்றி தாம் மகிழ்ச்சியடைவதாகவும், இந்நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்காவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு கிடைக்கும் என்றும் தெரிவித்தசட்டளை அதிகாரி,

இந்து சமுத்திரத்தில்நடமாடும் சுதந்திரத்தை உறுதிசெய்யும் முகமான நடவடிக்கைகளிலும், கடலில் பணியிலீடு பட்டிருக்கும் படையினருக்கு பாதுகாப்பு வழங்குவதிலும் ஈடுபட்டே இங்கு வந்ததாகவும்,

தமதுபணியின்இறுதிஇலக்கு உலகிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் யுத்தக்கப்பல்கள் இங்கு வரவிருக்கின்றன. அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலானஉறவுகள இதனால் பலப்படும் எனவும் கூறினர். (உ)

## வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்கு சலுகை அடிப்படையில் உதவுக

### ஆசிய அபி.வங்கியிடம் சொக்ஸி வேண்டுகோள்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளின் பலாபலன்களைவடக்கு-கிழக்கின் மக்களும் அனுபவிக்கும் வகையில் வீதிகள், வைத்தியசாலைகள்,பாடசாலைகள் ஆகியவற்றை திருத்தியமைத்து அபிவிருத்தி செய்வதற்காக சலுகையடிப்படையில் நிதியுதவிகளை தந்து உதவுமாறு நிதியமைச்சர் கே.என்.சொக்ஸிமனிலாவை தலைநகராககொண்டியங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ராடோ சைனோவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்;

சீனாவின் ஷங்காய் நகரில் வங்கியின் 35 ஆவது ஆளுநர் ஆண்டுக் கூட்டத்தில் சனிக்கிழமையன்று மேற்படி வேண்டுகோளை சொக்ஸி தனிப்பட்ட சந்திப்பொன்றில் வைத்து வங்கியின் தலைவரிடம் விடுத்தார்.

ஆண்டுக் கூட்டத்தில் ஆசிய பசுபிக் பிராந்தியம், ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 60 நிதியமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட போர் நிறுத்தம் நன்கு செயற்படுவதாகவும், இருதரப்பினருக்குமிடையேயான பேச்சுக்கள் அடுத்த மாதம் தாய்லாந்தில் நடைபெற விருப்பதாகவும், இதன் மூலம் பிரச்சினைகளை இருதரப்பினரும் தீர்த்துக் கொள்ள வழியேற்பட்டுள்ளதென்றும் தலைவர் ராடோ சைனோவுக்கு, நிதியமைச்சர் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

ஆசியஅபிவிருத்திவங்கியின் ஆளுநர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய சீன ஜனாதிபதி ஜியாங் செமின் தென்னாசியாவின் பயங்கரவாதம்பற்றியும்குறிப்பாக இலங்கையின் நிலை பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் தனது உரையில்; இலங்கையரசாங்கம் வடக்கு-கிழக்கில் மேற்கொண்டுவரும் அமுலாக்கற் திட்டங்களில் தாம் திருப்தியடைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் உந்துணர்வு மக்களிடம் மேலோங்கிக்காணப்படுவதாகவும் நிதியமைச்சர் அங்கு தெரிவித்திருந்தார். (உ)

## மருதங்கேணி வைத்தியசாலையை மீள இயக்குமாறு வேண்டுகோள்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கில் பொது மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து மருதங்கேணி வைத்தியசாலையை மீள இயக்க உதவுமாறு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளைசுகாதார திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்கள் மீளக் குடியமர்ந்து வருவதை அடுத்து அப்பகுதியில் பிரதேச செயலகம், கூட்டுறவுச்சங்கங்கள் என்பன இயங்க ஆரம்பித்துள்ளன. இந் நிலையில் வைத்தியசாலை இல்லாதது பெரும் குறையாக உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இதுதொடர்பாக ஆராய்வதற்காக வைத்திய அதிகாரிகள்குழுவொன்று அப்பகுதிக்குச் செல்லவுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன, (உ-23)

## பொலிஸ் திணைக்களத்தில் பதவி உயர்வு வழங்கியமை தொடர்பாக கருத்து முரண்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் 120 பேருக்கு பதவி உயர்வு வழங்கியமை தொடர்பாக கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ் மா அதிபரின்உத்தரவின் பேரில் 120 பேருக்கு திடீர் பதவி உயர்வுகள்வழங்கப்பட்டன.

பிரதமரின் பாதுகாப்புப்பிரிவில் இருந்து 38 பேர், அமைச்சர்களுக்கான பாதுகாப்பு பிரிவில் இருந்து 7பேர்உட்பட 120 பேரும் இதில் அடங்கியிருந்தனர்.

இப்பதவி உயர்வுகள்யாவும் ஸ்தாபன கோவைவிதிகளை மீறி அமைந்துள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-8)

### சிந்தனைக்கு விருந்து

### நடிகருக்கு மன்றம் அமைக்கும் பேதையர்

சங்ககா லத்திலே திருமா வுண்ணி
சஞ்சலத்தைத் தன்கணவன் தந்த தாலே
பொங்குதுயர் விஞ்சமுலை திருகிச் செத்தாள்
போக்கிலிகள் திரைப்படத்தா திக்கம்கொண்டு
மங்கையரை ஏமாற்றி நம்ப வைத்து
மரணத்தைத் தழுவவைத் திடுகின் றார்கள்
இங்கிவரைக் கடவுளென் றேத்தி மன்றம்
அமைக்கின்ற பேதையரும் இருக்கின் றாரே!

- பழையவன்

## தாய்லாந்தில்இடம்பெறவுள்ளசமாதானப்பேச்சுதொடர்பாக சகல கட்சிகளின் தலைவர்களையும் திங்களன்று

# பிரதமர்ரணில் சந்தித்துப் பேசுவார்

(கொழும்பு)

தாய்லாந்தில நடைபெறவிருக்கும் சமாதான பேச்சு வார்த்தைகள் தொடர்பாக ஆராயவென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சகல கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாக தெரியவருகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை இச் சந்திப்பு பாராளுமன்றத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும், அரசுக்கும் இடையேநடை பெறவிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த நிகழ்ச்சித் திட்டங்கள தொடர்பாகவும், சமாதானம் தொடர்பாகவும் கட்சிகளிடமிருந்தும் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயேபிரதமர் இச் சந்திப்பை ஏற்படுத்தியுள்ளார்.

தாய்லாந்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடைபெறவுள்ள இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது, எதிர்க்கட்சியிலிருந்து 3 உறுப்பினர்களும் தொழிற்புலமையாளர்கள சார்பில் ஒருவருமாக 4 பேர் இதில் அங்கம்வகிப்பது தொடர்பான அறிவிப்பு அன்று பிரதமரால் வெளியிடப்படும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

சமாதானம் என்பது பல கட்சிகளின் கூட்டாகும் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவே பிரதமர் இவ்வாறான முடிவுகளை எடுத்து வருகிறார் என்று மேற்படி சந்திப்புக்குறித்து பாராளுமன்ற வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

பாராளுமன்றத்தில், சமாதான முயற்சிகளின் போது, அரசாங்கத்தின் சார்பில் அங்கம்வகிப் போரை தெரிவுசெய்வதற்கான பேச்சு வார்த்தை ஒன்று நேற்று இடம்பெற்றதும், குறிப்பிடத்தக்கது.

(உ-8)

### கல்வி அமைச்சர் இம்மாதஇறுதியில் யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 30 ஆம் திகதி பாடசாலைக் கல்வி அமைச்சர் சுணிமல ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அன்றைய தினம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வைத்து 1 A.B பாடசாலை அதிபர்களிடம் விஞ்ஞான பாடப் புத்தகங்களையும் கையளிக்கவுள்ளார்.

(உ-6)

## நாகர் கோவில் பாதை திறப்பு பற்றி க. கா. குழுவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் பாதை திறப்பு மற்றும் அப்பகுதி மக்களை மீளக் குடியமர்த்தாமை தொடர்பாக வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின், யாழ். அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நாகர் கோவில் பாதை திறக்கப்படவில்லை. அத்துடன் நாகர்கோவிலில் மக்களை மீளக்குடியமர்த்தப்படவுமில்லை.

நாகர் கோவில் பிரதான பாதை திறப்பு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நுழைவாயிலாகவும் உயிர் நாடியுமான பாதை ஆகும். இப்பாதையினூடாகத்தான் மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரை மக்கள் மீளக்குடியமரச் செல்கின்றனர்.

இடம்பெயர்ந்துநலிவடைந்துள்ள மக்கள் இப்பாதையினூடாகவே இலகுவாக குறைந்த செலவுடன் தமது இருப்பிடம் செல்ல முடியும்.

மேற்படி மக்களின் நன்மையை கவனத்திற்கெடுத்து இப்பாதை திறப்பு சம்பந்தமாக ஆவன செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விடயம் சம்பந்தமாக தங்களைச் சந்திப்பதற்கு எமக்கு ஒரு வாய்ப்பு தருமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ- 10)

# வாக்களிப்பதை தடுத்தமைக்கு இராணுவத்தினரே பொறுப்பு

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலின் போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வாக்காளர்கள் அனுமதிக்கப்படாமைக்குஇராணுவஉயரதிகாரிகளே காரணமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் போது வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படாமை குறித்து மட்டக்களப்பு வாசி ஒருவரால் அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்கு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வழக்குமீதான விசாரணையின் போது தேர்தல் ஆணையாளர் சத்தியக் கடதாசி மூலம் இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

தேர்தலின் போது வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டமை குறித்த இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஆகியோருடன் பேச்சு நடத்தியதாகவும்,

இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிப்பதுடன் வழக்கை நிராகரிக்குமாறும் தேர்தல் ஆணையாளர் சத்தியக் கடதாசி மூலம் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கில் முதலாவது பிரதிவாதியாக தேர்தல் ஆணையாளரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த)

## இராணுவத் தளபதியின்

# வாக்குமூலத்தை சமர்ப்பிக்க கண்டி நீதவான் உத்தரவு

(கொழும்பு)

அத்துருகிரிய வீடமைப்புத் திட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாக இராணுவத் தளபதி லயனல் பலகல்லவின் வாக்குமூலத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கண்டி நீதவான் சி. வி. ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துருகிரியவில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான வழக்கு விசாரணை கண்டி நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விசாரணையின் போதே நீதவான் கண்டி பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பனைக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட வீட்டினை இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படியும் நீதவான் பணித்துள்ளார்.

வழக்கு விசாரணையின் போது ஆறு இராணுவத்தினரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் வழக்கு விசாரணை யூலை 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(த)

## ஜனாதிபதி விரைவில் லண்டன் செல்வார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தனிப்பட்ட விஜயமொன்றை மேற் கொண்டு இந்த வாரம் லண்டன் பயணமாகவுள்ளார்.

பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுடன் இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து இவர் ஆராய்வார் என தெரியவருகிறது.

கடந்த 6ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெற்ற சிறுவர்களுக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சென்ற இவர் அங்கிருந்தே லண்டன் பயணமாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## பாபாவின் விழுமியங்களை பாடசாலைகளில் கற்பிக்க கல்வி அமைச்சர் விருப்பம்

(கொழும்பு)

இந்தியாவின் தெய்வீக அருள் பெற்ற ஆன்மீகத்தலைவர் பகவான் சத்திய சாயி பாபாவின் மனித விழுமியங்கள் பற்றிய பாடத்திட்டம் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன.

கல்விஅமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு சாயிபாபா கல்வித்தத்துவம் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பேசும்போது இக்கல்வியைபாடசாலைகளில் அறிமுகம் செய்வதை தான் பெரிதும் விரும்புவதாக தெரிவித்தார்.

இதற்கான அனுமதியைஅரசாங்கத்திடமிருந்து கோரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

(உ)

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 9பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 4.30மணிக்கு அல்வாய் மனோகரா வி.க.எதிர் கொற்றாவத்தை சிவானந்தா வி.க, ஆகியன மோதவுள்ளன.

(உ 3)

## வன்னியால் வந்த தாயையும் மகளையும் ஏமாற்றி நகை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் இருந்து வந்த தாயையும், மகளையும் ஏமாற்றி பணம், நகை என்பவற்றை பறித்து சென்ற நபர் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

கடந்தசெவ்வாயன்றுஇடம் பெற்ற இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

வன்னியில் இருந்து முகமாலையில் வந்திறங்கி தாபடி செல்ல ஆயத்தமாக நின்ற சுகந்தா(வயது 8) என்பவரையும் அவரது தாயாரையும் அணுகிய மேற்படி நபர் அவர்களுடன் நட்புறவு பூண்டதுடன்,

யாழ்.மத்திய பேருந்து நிலையம்வரைஅழைத்துவந்து கைதடிக்கு அழைத்துச் செல்ல ஆட்டோ பிடித்துத்தருவதாக கூறி 500 ரூபாவைப் பெற்றுக் கொண்டதுடன் சிறுமியையும் அழைத்துச் சென்று சிறுமி அணிந்திருந்ததங்கநகைகளை அபகரித்த பின்னர் அநாதரவாக விட்டுச் சென்றுள்ளார்.

இதனை அறிந்த சிறுமியின் தாயார் அயலில் நின்றவர்களின் உதவியுடன் சம்பந்தப்பட்ட நபரைத் தேடிய பொழுது கஸ்தூரியார் வீதிப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டார்.

இதேவேளை, வன்னியால் வருபவர்களைஏமாற்றிபணம் நகை அபகரிக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

(உ-10)

# மக்கள் முன்னணியின் பதிவு இரத்துச் செய்யப்படமாட்டாது

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேர்தல் திணைக்களத்தில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி செய்திருந்த பதிவு இப்போதும்செல்லுபடியாகும் நிலைமையில் உள்ளது. ஆனால் புதிய செயலாளரின் பெயர் மட்டும் அதில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

'புலி'யை தேர்தல் சின்னமாகக் கொண்ட கட்சியின் செயலாளரின் பெயர் யோகரட்னம் யோகி எனப்பதியப்பட்டுள்ளது. தொடர்புக்கான தாபல் முகவரியாக 61, அப்துல் கபூர் மாவத்த, கொழும்பு-3 எனக்குறிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட காலத்திலிருந்து கட்சி எது வித தொடர்புகளையும் திணைக்களத்துடன்வைத்துக்கொள்ளவில்லை எனத் தெரிவித்த திணைக்கள அதிகாரியொருவர், குறித்த கட்சி தேர்தலில் போட்டியிடா விட்டாலும் பதிவு ரத்துச் செய்யப்படமாட்டாது எனத்தெரிவித்தார்.

(உ)

### கொடியேற்றம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அனலையம்பதி ஸ்ரீ எழுமங்கை மனோன்மணி அம்பாள்ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை முதல் பத்து நாட்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 26ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(உ-75)

# செலான் வங்கி யாழ் கிளை திறப்புவிழாக் காட்சிகள்




















# கியூபா மீது அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி

### ஜிம்மி காட்டர் உண்மைநிலையை தெளிவுபடுத்துகை

(ஹவானா)

பாரிய விளைவுதரக்கூடிய ஆயுதங்களைகியூபா தயாரிக்கவில்லை என கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மிகாட்டர் தெரிவித்துள்ளார்.

உயிருக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக் கூடிய அணு ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களைக் கியூபா தயாரித்து, பயங்கரவாதத்தை வளர்த்து வருகிறது என்று கூறி,

தீமையின் அச்சாணி என்ற பட்டத்தையும் அமெரிக்கா அதற்குச் சூட்டியிருந்தது.

கியூபாவிற்கு விஜயம் மேற்கொண்ட ஜிம்மிகார்டர் கியூபாவின் ஆயுதத் தொழிற்சாலை களைப்பார்வையிட்டதுடன், பாதகமான விளைவு பயக்கும் ஆயுதங்களை கியூபா தயாரிக்கவோ அல்லது ஏற்றுமதி செய்யவோ இல்லை என்பதை உறுதிப் படுத்தியுள்ளார்

இதே வேளை, ஜிம்மி கார்டரின் கியூபா விஜயத்தின் பின்னர் அமெரிக்காவுக்கும் கியூபாவிற்கும் இடையில் நிலவி வந்த பதட்டநிலை தணிந்துள்ளதாக தெரிய வருகிறது. (உ-7)

## காவலூருக்கான பேருந்து சேவை விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் ஊர்காவற்றுறைக்கான பேருந்துச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

779-1 இலக்கப் பாதையூடாக கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் பேருந்துச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நாட்களில் காலை 7.45 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்துபுறப்படும் பேருந்து 779-1 இலக்கபாதையூடாக ஊர்காவற்றுறையை அடையும்.

பிற்பகல் 2 30 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்படும் பேருந்து மேற்படி பாதையூடாக யாழ்ப்பாணமும் தினமும் பிற்பகல் 3.15 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் பேருந்து மேற்படி பாதையூடாக ஊர்காவற்றுறையை சென்றடையும்.

மேற்படி 779-1 இலக்கப் பாதையூடானபேருந்து யாழ். பஸ்நிலையத்தில் இருந்துபுறப்பட்டு வேலணை வங்களவடிச்சந்தி, வேலணைப்பிரதான வீதி, புளியங்கூடல் சந்தி, செருக்கன், பாலகாட்டுசந்திகளூடாக ஊர்காவற்றுறையைச் சென்றடையும்.(உ-75

## படகு விபத்து குறித்த விசாரணைக்கு குழு

(டாக்கா)

பங்களாதேஷில்நூற்றுகணக்கானவர்கள்பலியாகக் காரணமான படகு விபத்துக் குறித்து உண்மை நிலையை ஆராய புதிய விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மெக்னா ஆற்றில் சுமார் 500 பேருடன் சென்றதாகக் கூறப்படும் படகு விபத்துக்குள்ளானது இதில் 200 பேர் வரை இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தும் நாளுக்கு நாள் பலியானவர்களின் தொகை அதிகரித்துவந்துள்ளது.

இந்நிலையில் 450 பேருக்கு மேல் பலியாகியுள்ளார்கள் என்றும் இவர்களில் 369 பேரின் சடலங்களே மீட்கப்பட்டதுடன், 100 பேர் வரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (உ-7)

## காஷ்மீர் தாக்குதலுக்கு அனான் கண்டனம்

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 34 பேரைப் பலி கொண்ட சம்பவத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

நேற்று முன்தினம் கரிச்சாக் என்னுமிடத்தில் பஸ் வண்டியில் பயணம் செய்த படையினர் உட்பட 34 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதை கண்டித்த அனான்,

இதுபோன்ற சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கு சர்வதேச ரீதியில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (உ-9,7)

## எயிட்ஸ் மாநாட்டில் வாஜ்பாய் பங்கேற்பு

(புதுடில்லி)

மக்கள் மத்தியில் எயிட்ஸ் நோய்நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இந்திய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் கவலை தெரிவித்துள்ளார்.

எயிட்ஸ் சம்பந்தமாக புதுடில்லியில் இடம்பெற்ற மாநாட்டிலேயேஅவர்இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; எயிட்ஸ் நோயானது தென்கிழக்காசியா, தெற்காசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் அதிகமாக மக்களை பாதித்து வருகிறது.

இதற்கு விஞ்ஞானிகள் உடனடி மருந்தை கண்டுபிடிக்க வேண்டும். மற்றும் ஆலோசனைகள், அறிவுறுத்தல்களை மக்களுக்கு நேரடியாகவோ அல்லது ஊடகங்கள் மூலமாகவோ சென்றடையக் கூடியவாறு செயற்பட வேண்டும் என்றும் அவர்கேட்டுக்கொண்டுள்ளார். (உ- 7)

## உயிரைப் போக்க அனுமதி கோரிய பெண் இயற்கை மரணம்

(லண்டன்)

தனது உயிரைப் போக்கிக் கொள்ள அனுமதி கோரி போராடிய பெண்மணி காலமானார்.

டயன் பிரிட்டி வயது(43) என்ற பிரிட்டிஷ் பெண்மணி கொடிய மாறாத வியாதியால் பீடிக்கப்பட்டு நித்தமும் மரணத்துடன் போராடி வந்துள்ளார்.

நோயின் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இருப்பினும் அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

இந் நிலையில் கடந்த ஞாயிறன்று மேற்படி பெண் நோய் அதிகரித்த நிலையில் காலமானார்.

இதே வேளை, அவருக்கு இறப்பதற்கான அனுமதியை நீதிமன்றங்கள் வழங்க வேண்டும் எனக் கோரி, அவரின் கணவர் பிறரன்டயன் பிரசாரங்களை நடத்தி வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

### மெய்யுருகப்

முருகன் திருவிளையாடலை எண்ணியெண்ணி வணங்கினார்கள். ஆனந்தக் கூத்துமாடினார்கள். இந்த ஒன்றினாலே பேரம்பலத்தின் உள்ளக் கிடக்கை பற்றி யாவரு மறிந்து கொண்டாடினார்கள்.

### விமர்சனம்

**விமர்சகர்களிடையே ஊழல்கள்**

இப் பணியிலே சில விமர்சகர்களிடம் சில ஊழல்கள் காணப்படும்உயர்ந்த ரகமான ஒரு நூல் விற்பனையாகாமல் தேங்கி நிற்கும் போது மட்டமான செல்லாத பொருள்களைப் புகழ்ந்து செலவழிக்கும் தரகர்களாக மாறிவிடுகின்றனர். அந்தச் சமயங்களிலே, அவர்கள் வாசகர்களின் நிலையையோ நூலின் தரத்தையோ சிந்திப்பதில்லை புகழ்ந்து எழுதிவிடுகின்றனர். அது இத்துடன் நில்லாது நேர்மையான ஒருவன்அதற்கு மறுப்புஎழுதும் போது, அவன் மறுப்புக்கு மறுப்பு எழுதத் தொடங்கி விடுகின்றனர். பணத்தால் விளம்பரப்பலகையாகி விடுகின்றனர் விமர்சகர்கள். இது தவறு விமர்சனம் ஒரு கலை ஒரு அறிஞர் கூறியது போல விமர்சனம் கத்திமேல் நடப்பது போன்றதாகும். நல்ல விமர்சகர்கள் தீர்ப்புக்கூறும் நீதிபதி போன்றவர்கள்.

விமர்சகர்கள் நக்கீரர்கள் காணும் நூல்களிலே குறைபாடு காணப்படின் கூறாது விடக்கூடாது பணமென்னும் நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் நீதியையே நாடுபவர்களாக இருக்க வேண்டும் அப்போது தான் வளர்ந்து வரும் இலக்கியங்கள் மாசு நீங்கிக் காணப்படும்,

பொ. அண்ணாமலை

## ரஷ்ய,எகிப்து தேயிலை விற்பனை நிலையங்களுக்கு மூடுவிழா

(கொழும்பு)

ரஷ்யா, எகிப்து ஆகிய நாடுகளிலுள்ளதமது தேயிலை விற்பனை நிலையங்களினை மூடிவிடுவதென இலங்கைதேயிலை சபை தீர்மானித்துள்ளது.

தேயிலை விற்பனையின் சந்தை நிலைமையை கருத்தில் கொண்டே, இவ்விரு விற்பனை நிலையங்களையும் மூட தீர்மானித்துள்ளதாகப் பணிப்பாளர் ஸ்ரீடி அல்வீஸ் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோவிலும் ஹெய்ரோவிலும் முடப்பட்டஇவ்விரு நிலையங்களிற்கும் பதிலாக, சிங்கப்பூரிலும், போலந்திலும் திறப்பதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## வன்னிப்பகுதி ஆசிரியரின் தற்காலிக இணைப்பு ரத்து

(கொழும்பு)

தீவகப்பகுதி பாடசாலைகளில் தற்காலிகமாக இணைப்பின் பேரில் கடமையாற்றி வரும் வன்னிப்பிரதேச பாடசாலை ஆசிரியர்களை முன்னர் கடமையாற்றிய பாடசாலைகளுக்குமீண்டும்திரும்புமாறு வடக்கு -கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வன்னிப் பிரதேச பாடசாலை ஆசிரியர்களது தற்காலிக இணைப்பு உடனடியாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்னிப்பிரதேசத்தில் தற்போது சுமுகமான முறையில் கற்பிக்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தும் அங்குநிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதை கருத்திற் கொண்டும் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## வெளிநாட்டவர் தங்கியிருந்த வீட்டில் கைத்துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்பில் வெளிநாட்டவர் ஒருவர் தங்கியிருந்த வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போது, அங்கிருந்து வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றையும் தோட்டாக்களையும் கண்டு பிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைமேற்படி வெளிநாட்டவருக்கு உள்ளூர் வாசி ஒருவரே இவற்றை விற்றுள்ளார் என்பது கண்டறியப்பட்டதற்கிணங்க சம்பந்தப்பட்டவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஆயுதத்துடன் வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து அந்நாட்டு தூதரகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ9-)

## தரைவழிப் பாதையூடாக கட்டடப் பொருட்கள்

### யாழுக்கு கொண்டு வரப்படும்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கண்டி வீதி பாவனைக்காக திறந்துவிடப்பட்டதைதொடர்ந்து 12வருடங்களின்பின்னர்தரைவழி மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு கட்டடப்பொருள்கள் கொண்டு செல்லப்படவுள்ளதாக கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்களே 4 லொறிகளில் தரைமார்க்கமாக எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும், அவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பொருள்கள்யாவும், யுத்தம் காரணமாக சேதமடைந்துள்ள யாழ். நூலகம் உட்பட அரசாங்க கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு பயன்படுத்தப்படும்.

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் முயற்சி காரணமாகவே, யாழ்ப்பாணத்திற்கு கட்டடப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகிறது என கட்டடப் பொருள் கூட்டுத்தாபன பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## வெடிபொருட்களை பாவித்து கடலில் மீன் பிடிக்க விடுதலைப் புலிகள் தடை

(திருகோணமலை)

கடற்றொழிலாளர்களின் நலத்தை கருத்தில் கொண்டு கடலில் வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகதமிழீழவிடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை அறிவித்துள்ளது.

இவ்வறிவித்தலை சகலகடற்றொழிலாளர்களும் கருத்திற் கொண்டு செயற்படுமாறும் இந்நடவடிக்கை நேற்றுமுதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## வெளிமடை

### பொங்கல்விழா

(மந்திகை)

தும்பளை இலட்சுமனந் தோட்ட ஸ்ரீ வீரபத்திரகாளி அம்மன் ஆலயம், தும்பளை நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம் என்பவற்றில் நாளை இரவு வெளிமடைப் பொங்கல் விழா இடம் பெறவுள்ளது. (உ-23)

### வருடாந்த உற்சவம்

(உரும்பராய்)

உரும்பராய்பார்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளைவெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி

ஆலய தேர் தீர்த்தஉற்சவங்கள் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. (உ-8)

ஒல்லும் வகையான் அறிவினை ஓவாதே
செல்லுமவாயெல்லாஞ்செயல்
குறள்

வலம்புரி

## அம்பலமாகும் உண்மை

புதிய இடது சாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தமிழர் பிரச்சினையை உணர்ந்து கொண்ட ஓர் சிங்களத் தலைவர்.

இன்று நேற்று அல்ல அன்று தொடக்கம் தமிழர் பிரச்சினையில் யதார்த்தசிந்தனையோடு கருத்துக்களைத் துணிந்து வெளியிடுவதில் அவர் ஒரு போதும் பின்நின்றதில்லை.

அவர் நேற்று முன்தினம் 14 ந் திகதி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்காவின் யுத்தக் கப்பல் குறித்து பிரஸ்தாபித்துள்ளார். அமெரிக்க ஆயுதக் கப்பல்களை இலங்கைக்கு வரவழைத்து தமிழ் மக்களை அச்சுறுத்தும் செயலில் புதிய அரசு ஈடுபட்டுள்ளது என்ற உண்மையை முதன்முதலில் துணிந்துகூறியிருக்கிறார்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கூறிய இவ் விடயத்தை வெறுமனே விட்டு விட முடியாது. ஏனெனில் அதற்குள் நிதர்சனமான உண்மைகள் உண்டு. புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற பேரில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்திய பின் இலங்கை அரசு அமெரிக்க ஆயுதக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்திற்கு வர அனுமதித்தமை அல்லது வரவழைத்தமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் பட்டுமன்று. தமிழ் மக்களை ஏதோவொரு வகையில் எச்சரிக்கை செய்வது போலவும் அமைந்துள்ளது.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண பத்திரிகையாளர் மாநாட்டில் கூறிய மற்றொரு மறைமுகமான கருத்து வல்லரசு நாடுகளையோ அல்லது இந்தியாவையோ வரவழைத்து முல்லைத்தீவு அல்லது வேறு பிரதேசத்தை சுற்றிவளைத்து எவரையாவது கைது செய்ய அரசு முனையுமாக இருந்தால் அதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்று கூறியுள்ளார்.

கருணாரட்ணவின் இக்கருத்து அரசின் மறைமுகமான- இரகசியமான திட்டம் வெளிப்படுத்தப்பட்டதாகக்கூடக் கருத இடமுண்டு.

எதுவாயினும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிந்திக்காத ஓர் விடயத்தை கருணாரட்ண சுட்டிக்காட்டியுள்ளார். இதில் தமிழ் மக்கள் மிக மிக விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

# மெய்யுருகப் பாடி மேன்மை அடைந்தவர்

# சங்கீத பூசணம் ச. பேரம்பலம்

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானடைந்த சங்கீத பூஷணம் பேரம்பலம் அவர்களை அடியேன் சிலமாதங்கள் மாத்திரம் அறிவேன். உடுவிற் பதியிலே சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகர் கோயிலின் உட்பிரகாரத்தில் எழுந்தருளியிருக்கும் மகா காளியம்மையார் திருவாக்குப்படி அடைக்கப்பட்டிருந்த அம்மையின் கோயிற்கதவு மீண்டும் திறக்கும் படியான வாக்கின்மையால் அடைக்கப்பட்டிருந்தது. கோயில் திருவாட்டிசொர்ணாம்பிகை மீள மீள வேண்டியும் கதவு திறந்தபாடில்லை. ஆனால் பன்னிரு திருமுறை ஓதும்படி கட்டளை பிறந்தது. அதனால் யாழ். நகர் முழுவதுமுள்ள அடியார்களெல்லாம் வந்து திருமுறைஓதினார்கள்.

ஓதியவருள் திருபேரம்பலம் அவர்களுமொருவர். கரும்போ பாலோ தேனோ அமிர்தமோ என வந்திருந்து கேட்போரை யெல்லாம் உருக்கியது அவரது அருமையான இசை. இடம் பெயர்ந்து மானிப்பாயில் குடிகொண்டிருந்த பேரம்பலத்தின் பாட்டினைக் கேட்க, பண்ணிசைவல்லோரும் சங்கீத பூஷணங்களும், உடுவிலை யடைந்து முப்போதும் கேட்பர். உயர்ந்த உள்ளமும் மலர்ந்த முகமுமுடைய பேரம்பலத்தின் சௌந்தரியமுகமானது வீபூதி பூச்சினாலும் சந்தனப்பொட்டினாலும் பிரகாசமாயிருக்கும் ஆசார சீலமும் தாராளமான உடற்பொலிவு முடையபேரம்பலம் மிக்க சாந்தமானவர்· எல்லோராலும் பேரம்

## மறைந்தார் மாண்பு

பலம் ஐயா என அழைக்கப்படுபவர்.

பச்சைப் பசேலென்று
பார்த்தவர்களையழைக்கும்
மிச்சம் வளங்கொண்டு
மேவும் பெரியோரால்
அச்சாவூ ரென்று
அழகாய் அமைந்திருக்கும்
கச்சாயூரே தந்த
கனவானே பேரம்பலம்
அந்தக்காலம் தொட்டு
சைவப்பயிர்வளர்க்குந் தென்

முதுபெரும் புலவர்

## வை. க. சிற்றம்பலம்

மராட்சியிலே பெரும்பாலும் சைவர்களே குடிகொண்டு வாழும்ஊர்களில் கச்சாயூருமொன்று. தனது இளமையிலேயே கல்வி கற்றுயர்ந்த மகன் பண்ணிசையில் மிக்கவராகக் காணப்பட்டமையால் பெற்றோர் அண்ணாமலையில் அவரை நான்காண்டு கற்க அனுப்பினார்கள் சிதம்பரம் முதலிய சிவத்தலங்களை வணங்கி, சங்கீத பூஷணமாகி ஊர்வந்த பேரம்பலம் சங்கீத ஊதிய ம்மூலம் தமது வாழ்க்கையை நடத்தி வந்தார். இடம் பெயர்திருந்த காலத்திலும் மானிப்பாய் மருதடி விநாயகரையும் நல்லூர் முருகனையுந் தாவறது வணங்கி வந்தார். நல்லையாதீனத்தில் நடந்த புராண படனத்திலும் பங்குகொண்டு வந்தார். தொடர்ந்து உடுவிலில் திருமுறையோதி வந்தார். சென்ற ஆடிப்பூரத்தன்று அம்மை அருளிய திருவாக்குப்படி கதவு திறந்தது கண்டு, தொடர்ந்து பன்னிரு நாள் நடந்த அபிஷேக ஆராதனையிலும் கலந்து மாகாளியம்மை மீது. ஒரு அருமருந்தன்ன பாடலை இயற்றிப் பாடி எல்லோரையும் உருக வைத்தார் வாழ்க்கைத் துணைவியார் திருமதி தனலட்சுமியுடன் உலகம்புகழஇல்லற வாழ்க்கையின் பயனாக ஸ்ரீரஞ்சினி, செந்தில்குமார், கேமரஞ்சினியென மக்கள் மூவர் உதித்தனர். மூவரும் விவாகமாகி பிறநாடுகளில்வசிக்கிறார்கள். பிள்ளைகளைக் காணவோ, கதைக்கவோ விரும்பிகுடும்பத்துடன் கொழும்பு சென்றவர் அங்கேயே காத்திராப் பிரகாரம் இறையடி சேர்ந்துவிட்டார்.

### அற்புதம்

முன்னொரு போது தமது மகனை அனுப்ப வேண்டி, கொழும்பு சென்ற பேரம்பலம், மகனை அனுப்பியபின் யாழ்ப்பாணம் திரும்ப எண்ணினார் ஆனால் அதற்கேற்ப போதிய காசு கையிருப்பில்லாதது கண்டு வருந்தினார். இத்தனை காலமும் மற்றவரிடம் கை நீட்டாத பேரம்பலம் இறைவனிடங் கேட்போம் என்று ஜிந்துப்பிட்டியடைந்தார் உருகி உருகிப் பாடினார். முருகனுக்கு அவரது பாட்டில் ஈடுபாடுண்டியது. அன்பரின் பாடலில் ஈர்க்கப்பட்டு கோயிலில் வணங்க வந்த முருக பக்தர் ஒருவர், தனது கயாரக்காசுக் கட்டளையில் ஒரு தொகைப்பணத்தைப்போட்டு அவர் கையிற் கொடுத்தார். இந்த நிலையில் பேரம்பலத்தின் அன்பு பொங்கித் ததும்பி ஊற்றெடுத்தது. கண்ணீர் மல்கக் கந்தன் கழலைச் சிக்கெனப் பிடித்துப் பாடினார். எல்லா முருக பக்தர்களும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# விமர்சனம் என்பது வாள் மேல் நடப்பது,

# தாள் பணிந்து தலை சாய்ப்பது அல்ல

**இது** பத்தரை மாற்றுப் பசும்பொன் இது ஒரு மாற்றுக் குறைந்தது. இது மட்டப் பொன் என மாற்றிலே பாகுபடுத்திக்கூற உரைகல் உதவுகிறது. அதுபோல இலக்கியத்திலே அதன் தராதரத்தை உயர்ந்தது, உபயோகமானது, மட்டம் அது பயனற்றது என ஆராய்ந்து கூறுவது விமர்சனம்.

ஒரு நூல் விமர்சகனிடத்திலே கிடைத்தபோது, அந்த நூலின் வாழ்வு நிர்ணயிக்கப்படுகிறது. ஆசிரியரின் கருத்து சரியானதல்ல கற்பனைத் திறன் குறைவு, மொழியிலே பிசகு என இழிவு படுத்திக் கூறும் போது-அது வாசகர்களின் உள்ளத்திலே வேலை செய்யத் தொடங்கி விடுகின்றது.

### பண்டைக் காலத்திலே

பண்டைக் காலத்திலே, இலக்கிய விமர்சனங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டிருந்த மன்றங்களிலே நூல் அரங்கேற்றத்தின் போது நிகழ்ந்தன மன்றத்திலே கூடிய புலவர்கள், அறிஞர்களிடையே நூல் அரங்கேற்றம் நடைபெற்றது. அந்த நூலிலே உள்ள குறைபாடுகளைக் கூறினர். ஏற்பட்ட சந்தேகங்களை நூலாசிரியனிடமிருந்து கேட்டு அறிந்தனர். இம்மாதிரி சமயங்களிலே புலவர்களுக்கிடையே பொறாமையினாலோ மற்ற சில காரணங்களாலோ அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்து அம்முயற்சிகள் வீணாயின.

ஒரு நூலைப் பற்றிப் பலர் விமர்சனம் எழுதும் போதும், கருத்து பல விதமானதாக இருப்பது இயற்கை. அதுவுமன்றி அரசியலிலே மாறுபட்ட கருத்துடையவர்கள் விமர்சனம் கூறும் போது, தாழ்வான மனப்பான்மை கையாளப்படுகின்றது ஒரு நூலிலே கையாளப்பட்ட கருத்தை வெறுப்பவர்களும் இருக்கலாம் விரும்புபவர்களும் இருக்கலாம் அது அவரவர் மனோநிலையைப் பொறுத்தது.

### மூலகாரணங்கள்

ஒரு ஆசிரியர் ஒரு நூலை எழுதும் போது, சில மூல காரணங்களைக் கையாளுகிறார். அந்தஆசிரியர் நூலின் முன்னுரையிலே அந்தக் காரணங்களைக் கூறுவதும்உண்டு. விமர்சகர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆராய்தல் சிறந்தது.

அதுவுமன்றி, ஆசிரியரின் வாழ்க்கை அனுபவம், வாழ்ந்த சூழ்நிலை, கொண்ட கொள்கை ஆகியவற்றிலிருந்தும் அறியலாகும். அவற்றை முகவுரைப பகுதியிலே காணலாம். கதாசிரியர்கள் கதையிலே வரும் உறுப்பினர்கள் மூலம் தமது விருப்பு வெறுப்புக்களையும், கொள்கைகளையும் வெளிப்படுத்தல் இயல்பு. பிரசாரமற்ற கதையோ காவியமோ கிடையாது.

சில விமர்சகர்கள் ஒரு நூலின்கண் காணப்படும் கருத்தை தமது கருத்துக்கிணங்க திணித்து அமைத்துக்கொள்வதும் உண்டு. இத்தகையவற்றிலே சிக்கிய நூல்களிலே திருக்குறள் ஒன்று.

### இலக்கியம் உடல்

இலக்கியம் ஓர் உடல் விமர்சகன். அந்த உடலிலே உள்ள உறுப்புக்களையும் அது இயங்கும் விதத்தையும் இயங்குவதால் ஏற்படும் மாறுதல்களையும் பாகுபடுத்திக்காட்டும் கலைஞன்.

விமர்சகன் ஒரு நூலிலே உள்ள கருத்தை ஊன்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். நூல் எழுதப்பட்ட தன் நோக்கம், அதிலே அடங்கியுள்ள கருத்து ஆகியவைகளை நேர்மையான நடுநிலைக் கண் கொண்டு பார்க்க வேண்டும். அந்த நூலிலே காணப்படும் சில சொற்றொடர்கள் மேலெழுந்தவாரியாக கவனிக்கப்படும் போது, சாதாரணமானதாகத் தோன்றும் ஆனால் அதைப் பல கோணங்களிலிருந்து அலசி, ஆராய்ந்து பார்க்கும் போது அதிலே புதைந்து கிடக்கும் கருத்து வெளிப்படும்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்




நம்பிக்கை வைப்பதற்கு இராமர், கிருஸ்ணர் போன்ற அவதார புருஷர்களின் சூட்சுமங்களை ஆழமாகச் சென்று அறியவேண்டுமேயன்றி அவர்கள் சம்பந்தப்பட்ட புறச்சம்பவங்கள் மனக்குழப்பங்கள், வீரதீரங்கள் புறக்கிருத்தியங்கள் என்ற சிக்கலுக்குள் உங்கள் பாதையை தவறவிடக் கூடாது.

கடத்தப்பட்ட மனைவியை வீரத்துடன் மீட்டெடுத்த ஒரு கணவனாகவோ அல்லது மகன் சகோதரன் என்ற தனிப்பட்ட உறவு முறைகளில் சிக்கிக் கொண்ட ஒரு மனிதனாகவோ இராமரைக் கருதாதீர்கள்.

அவதார சூட்சுமத்தின் குளிர்ந்த ஆழங்களுக்குச் சுழியோடிச் செல்வதனால் மட்டுமே நீங்கள் அவதாரத்தை வணங்குவதற்குரிய மனோநிலையை பெறமுடியும். இந்த வழிமுறை சூட்சும ஞானிகளினால் விசேடமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதுவும் குறிப்பாக இந்திய ஞானிகளாலேயே கண்டு பிடிக்கப்பட்ட காரணத்தால் இந்தியா உலக ஸ்தானத்துக்கு உயர்வடைந்தது.

நன்றி

- நாளாந்த நற்சிந்தனை



உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு வருகைதந்திருந்த பணிப்பாளர் நடத்திய பத்திரிகையார் மாநாட்டில் யாழ் உயர் தொழில் நுட்பநிறுவன பணிப்பாளர் ரீ.இராஜரட்ணம் மற்றும் விரிவுரையாளர் கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம். படம்:துஷ்யந்தன்

# பல்கலைக்கழக அனுமதியில் யாழ் மாவட்டம் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது

## துணைவேந்தர் பேராசிரியா பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்து

(யாழ்ப்பாணம்)

2002/2003ம் ஆண்டுக்கான Z புள்ளிமுறையிலான பல்கலைக்கழக அனுமதியை மாவட்ட ரீதியாகப் பார்க்கும்போது யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாம் இடத்தை வகிப்பதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையில் Z புள்ளியிடல் முறையில் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக கேட்டபோது யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரமபிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் போர்க்கால சூழ்நிலையிலும், மாவட்டத்தின் பெறுபேறுகள் பல கற்கைநெறிகளில் கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்த படியாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தின் கல்வி நிலை கீழ் நோக்கி சென்றிருப்பது கவலைக்குரிய விடயமாகும். அவர்களின் பெறுபேறுகள் மாவட்டத்தின் கோட்டாவைப் பெற்றிருந்தாலும் கல்வி நிலை வீழ்ச்சி நிலையில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில குடிசனக்கணிப்பு இடம்பெறாமையினால் மாவட்டக் கோட்டா 1981ம் ஆண்டு குடிசனக் கணக்கெடுப்பின் அடிப்படையில் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந நிலையிலும் குறிப்பிடத்தக்க மாணவர்கள் இம்முறை யாழ் மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

மருத்துவ பீடத்திற்கு சுமார் 80 வரையிலான மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இதேபோல் ஏனைய பீடங்களின் மாணவர் தெரிவு விபரம் தெரியவரவில்லையாயினும் கலைப்பீடத்தைப் பொறுத்தவரையில் நேரடியான அனுமதி மூலமும் விசேடமான அனுமதிகள் மூலமும் குறிப்பிடத்தக்க மாணவர்கள் அனுமதி பெற வாய்ப்புண்டு.

2லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த. உயர்தரப்பரீட்சை எடுத்து அதில் 12500 மாணவர்கள் இலங்கையின் 13 பல்கலைக்கழகநகளுக்கும் தெரிவு செய்யப்படும் போது பல்கலைக்கழக அனுமதி போட்டி நிறைந்ததொன்றாக நாடு முழுவதிலும் காணப்படுகிறது என்றும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (வ)

## பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்கு

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிருந்து பயிற்சியை முடித்து வெளியேறும் யாழ் வலயப பாடசாலைகளைச் சேர்ந்த நிரந்தர ஆசிரியர்கள் தங்கள் முன்னைய பாடசாலைகளில் கடமை ஏற்கும் படியும் யாழ்வலயப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்பை பெற்று கடமையாற்றியவர்கள் தங்கள் நிரந்தரப் பாடசாலைகளின் வலயக் கல்விப்பணிப்பாளரின் பணிப்பை ஏற்று செயற்படும் படியும் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுள்ளார். (த)

### காலைமுதல்..

1மணிக்கு முன்னதாக பயணத்தை மேற்கொள்ளவேண்டுமெனவும், அத்துடன் சோதனைச் சாவடிகளூடாக கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குள் செல்லும் பொதுமக்கள் கண்ணிவெடி, மிதிவெடிகள், பொறிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

### பிரதமர் ரணில்...

இறுதிக் கட்டம் நெருங்கும் போது எதிர்க்கட்சிகளின் மூன்று தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் பொருட்டு தெரிவுசெய்யப்படவுள்ளதாகவும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.'

இதனை அடுத்து இம் மாத இறுதியில் லண்டன் செல்லவுள்ள பிரதமர் அங்கு ஒரு வாரம் தங்கியிருந்து பிரதமர் ரொனி பிளேயரையும், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பை முடித்துக் கொண்டு பிரேசில் நாட்டிற்கு விஜயம் செய்து சமாதான முயற்சிக்கு ஆதரவு திரட்டவுள்ளார். இதனை அடுத்து இலங்கை திரும்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்கும் தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வெளிநாட்டுத் தலைவர்களிடம் சமாதான முயற்சிகள் பற்றி எடுத்துக் கூறி அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு முழு அளவிலான ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் முதலாம் வாரத்தில் இந்தியாவுக்கு செல்லவுள்ள பிரதமர் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணன், மற்றும் உள்த்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி மற்றும் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். (வ)

### 24மணி நேரமும்...

ராஜபக்ஸ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

முகமாலைச் சோதனைச் சாவடியை 24மணி நேரமும் திறந்து பயணிகள் போக்குவரத்துக்கு விடுவது தொடர்பாக ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக இப் பேச்சுவார்த்தை இடம்பெற்றபோதும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு இராணுவத் தரப்பில் எந்த விதமான பதிலும் வழங்கப்படவிலலை ஆயினும் நேற்றைய பேச்சுவார்த்தை தொடர்பாக மேலிடத்துடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (ம)

### வலி வடக்கு...

பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அம்மகஜரில் 31.05.2002க்கு முன்பு யாழ் அரச அதிபர், கல்விப்பணிப்பாளர், விவசாயப்பணிப்பாளர், மீன்பிடித்துறைப் பணிப் பாளர், சுகாதார வைத்திய அத்தி யட்சகர் முதலான திணைக்கள தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலி வடக்கின் பொது அமைப்பின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் முப்படை அதிகாரிகள், பிரதேச சபைத்தலைவர் ஆகியோர் அடங்கிய கூட்டம் ஒன்று கூட்டப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாண ஆணையாளர் அசோகா ஜெயவர்த்தனாவின் பிரதிநிதியான பிரதிப் பணிப்பாளர் கலாநிதி க.குணராசா உண்ணாவிரதம் தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் பொருட்டு உண்ணாவிரதிகளைச் சந்தித்து பேசினார்.

வலி வடக்கு புனர்வாழ்வுக் கழக தலைவர் எஸ்.பரமநாதன், வசாவிளான் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.எஸ்.நடராஜா, முன்னாள் எம்.பி எஸ்.சிவமகாராஜா யாழ் மாவட்ட எம்.பி என்.ரவிராஜ், புனர்வாழ்வுக் கழகச் செயலாளர் கே.சிவபாலன்உட்பட பலர் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில்கலந்து கொண்டனர்.(ம.12)

### கொழும்பில்..

லேயே கொழும்பு நகரிலும் சோதனைச் சாவடிகள், பாதுகாப்பு அரண்கள் மற்றும் வீதித் தடைகள் நீக் கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தன.

தற்பொழுது பாதுகாப்பு ஏற்பாடுகளை மிகவும் பலப்படுத்தி கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படி பிரதமர் படைத்தரப்புக்கு உத்தரவிட்டுள்ள தாக அச் செய்தி ஏஜென்சி மேலும் தெரிவித்தது.

இதேவேளை எதிர்க்கட்சிகள் கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப் படுத்துமாறு அரசைக் கோரி வருவதாலேயே பாதுகாப்பைப் பலப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் அரசு பாதுகாப்பைப் பலப்படுத்துவதில் ஆர்வம் காட்டுவது மக்களை சமாதானத்தின் மீது சந்தேகம் கொள்ள வைத்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

## கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைக்கப்படும்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம அரசியல் பணிக்குழுப் போராளி சு.பாலையா தலைமையில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது.

இதில் புனரமைப்புக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்மாவட்ட அரசியல்த் துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி கலந்து கொண்டு உரையாற் றினார்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம கட்டம் கட்டமாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

## கடற்படை முகாமில் கலந்துரையாடல்

(யாழப்பாணம்)

காங்கேசன்துறை கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் வலி மேற்கு மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் சுழிபுரம், காரைநகர், மாதகல், ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர்.

கடற்றொழிலில் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது. (இ-6)


மில்க்வைற்




25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து ஓர் அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 3541




லாலா
சோப்
சன்சயின்
சோப்
எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.
லாலா அச்சுவேலி

UNIVAC
College of Computer Information Technology.
(British ACP Recognized Computer Training Center)

விசேட கணனிப்பயிற்சி

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கு எமது நிறுவனத்தினால் வருடாந்தம் புலமைப்பரிசில் ஊடாக கணனிப்பயிற்சி வழங்கப்படுகின்றது. மாணவர்கள் உடன் விண்ணப்பங்களை மேற்கொள்ளவும். எமது நிறுவனத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் அல்லது சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் A/L பரீட்சை சுட்டெண்ணை குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 25/05/2002

(இவ் ஆண்டு போட்டிப் பரீட்சை இன்றி முதலில் விண்ணப்பிக்கும் 500 மாணவர்களிற்கு மட்டுமே இப் பயிற்சி வழங்கப்படும்.)

1201,K.K.S Road Jaffna | Point pedro Road Atchuvely | Managing Director 5310

மீண்டும் யாழ் நகரில்...



Coca Cola




இன்று முதல் 16.05.2002

COCA COLA
FANTA
SPRITE
PORTELLO

எம்மிடம் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம், என்பதை எமது வாடிக்கையாளர்கள் சகலருக்கும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

SriMurugan 303, K.K.S Road, Jaffna T.P:021-2670


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.